# கடலூர் பெருநகராட்சி

2020ம் ஆண்டு **செப்டம்பர்** மாதம் 30—ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்க்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.09.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண்.1 முதல் 45 வரை திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையங்களில் உள்ள 20க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறு நீர்மூழ்கி மோட்டார்கள், கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் நகரமெங்கும் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகளுக்கான ஆழ்துளை நீர்மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணிக்கு ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், இச் செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 2) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண். 1 முதல் 45 வார்டு வரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய், பிரதான குழாய், வால்வுகள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள், வால்வுகளில் பழுது நீக்கும் பணி ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், இச் செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 3) | கடலூர் நகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை உரக்கிடங்கு பகுதியில் உயிரியல் அகழாய்வு (Bio Mining) முறையில் குப்பைகளை தரம் பிரித்தெடுக்க தேவையான இயந்திர தளவாடங்கள் அமைத்து பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மெசர்ஸ் Zigma Global Environ Solutions Private Limited என்ற நிறுவனத்தின் மூலம், நகராட்சி வார்டு எண் 28, நெ.9, சக்தி நகர், வண்டிப்பாளையம் ரோடு, கரையேறவிட்ட குப்பம், கடலூர் என்ற விலாசத்தில் குடியிருக்கும் திரு.ஆர்.அமரேஷ், த/பெ.ரகுபதி என்பவருக்கு சொந்தமான கம்மியம்பேட்டை குப்பை கிடங்கிற்கு அருகாமையில் உள்ள வார்டு 5, பிளாக் நெ,1, டி,எஸ்.நெ.3ல் காலியாக உள்ள இடத்தினை பயன்படுத்திக் கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளவும், அதற்காக வாடகை தொகை மாதம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**நிபந்தனைகள் :-**<br>1 தனியாருக்கு சொந்தமான இடத்தில் உள்ள முட்புதர்கள் மற்றும் மேடு பள்ளங்களை நகராட்சி சொந்த செலவிலேயே சீரமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.<br>2 காலி இடத்திற்கான மாத தர வாடகை ஒரு சதுர அடிக்கு ரூ.0.50 என்ற வீதத்தில் சுமார் 40249 சதுர அடிக்கு மாதம் ரூ.20000/– ஆகும்.<br>3 பிரதி மாதம் 10ம் தேதிக்குள் மேற்படி வாடகையினை காசோலையாக செலுத்தப்பட வேண்டும்.<br>4 கம்மியம்பேட்டை குப்பை கிடங்கின் ஒரு பகுதியில் காலியானவுடன், மேற்கண்ட பணிக்கு இயந்திரங்களை அமைக்கும் அளவிற்கான இடம் கிடைத்தவுடன், தங்களுக்கு சொந்தமான காலி இடத்தில் உள்ள இயந்திரங்களை மாற்றி நகராட்சி இடத்தில் பணி மேற்கொள்ளலாம்.<br>5 திட்டப் பணிக்கான இயந்திரங்களை எடுக்கப்பட்டவுடன் தனியார் நிலத்தினை பழைய நிலைமைக்கு. சீரமைத்து ஒப்படைப்பு செய்து தர வேண்டும்.<br>6 மேலும் இயந்திர தளவாடங்கள் பொருத்தப்பட்டிருக்கும் காலத்திற்கு மட்டுமே தரை வாடகை செலுத்தப்படும்.<br>7 இயந்திர தளவாடங்களை அப்புறப்படுத்தப்படும் நாளிலிருந்து இவ்வொப்பந்தம் தானாகவே காலாவதியாகி விடும்.<br>8 நில உரிமையாளர் திட்டப் பணி முடிவுறும் வரையில், பணி மேற்கொள்ளும் இடத்திற்கு எந்தவித இடையூறு செய்யாமலும், நிலத்தின்மீது எந்தவித உரிமையும் கோரக்கூடாது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 4) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள Canon பிரிண்டர் இயந்திரம் தற்போது பழதடைந்துள்ளது. இவ்வியந்திரத்தை கொண்டே பொறியியல் பிரிவின் அனைத்து கணினியிலிருந்தும் பிரதிகள் எடுக்கப்பட்டு வந்தது. இயந்திரத்தை பழுது நீக்கம் செய்வதற்கான செலவு அதிகமாக உள்ளதால், புதிதாக குறைந்த விலையில் அதிக பயன்பாடு உள்ள கருப்பு/ வெள்ளை பிரிண்டர், கலர் ஸ்கேனர் மற்றும் கூடுதல் நவீன தொழில்நுட்பங்கள் அடங்கிய பிரிண்டர் gem rate ல் வாங்கும் பணி ரூ.1,15,000/– (ரூபாய் ஒரு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற |

அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

5) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடலூர் நகராட்சிக்குட்பட்ட வன்னியர்பாளையத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.6,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.09.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி.டி.வசந்தா, கடலூர் | 0.12%<br>மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.30%<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி.டி.வசந்தா, கடலூர் என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.12% குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திருமதி.டி.வசந்தா, கடலூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

6) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடலூர் நகராட்சிக்குட்பட்ட ஆல்பேட்டையில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.6,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.09.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி.டி.வசந்தா, கடலூர் | 0.12%<br>மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.30%<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி.டி.வசந்தா, கடலூர் என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட

0.12% குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திருமதி.டி.வசந்தா, கடலூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**7)** கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி (2020–21)ன் கீழ் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பெரியார் கலைக் கல்லூரியில் குடிநீர் வசதி, மின்சார வசதியுடன் கூடிய 14 எண்ணிக்கை குளியலறை, 6 எண்ணிக்கை கழிவறை மற்றும் மருத்துவர்களுக்கான குளியலறையுடன் கூடிய கழிவறை அமைத்தல் பணி ரூ.9,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 25.09.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. பி. பற்குணன், கடலூர் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர், என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**8)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வேணுகோபாலபுரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கட்டடம் மராமத்து பணி ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

9) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வேணுகோபாலபுரம் நகராட்சி தொடக்கப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கட்டிடம் மராமத்து பணி ரூ.3,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 27.08.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.14% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. டி.சேஷாத்திரி, கடலூர் | 0.15% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர், என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.14% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

10) கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் புதிதாக கருப்பு/வெள்ளை, கலர் ஸ்கேனர் மற்றும் கூடுதல் நவீன தொழில்நுட்பங்கள் அடங்கிய பிரிண்டர் gem rate-ல் வாங்கும் பணி ரூ.1,15,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 22.09.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M/s.Sri Vishnu ganapathi Enterprises, Cuddalore | 0.01% (ரூ.1,14,165/) மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | M/s. D.D.Solutions, Cuddalore | 0.15% (ரூ.1,24,310/) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s.Sri Vishnu ganapathi Enterprises, Cuddalore என்கிற நிறுவனம் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டை விட குறைவு ரூ.1,14,165/) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Vishnu ganapathi Enterprises, Cuddalore என்கிற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு. | **1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **11)** | கடலூர் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN 31 BD 9829 சிறிய ரக வாகனம் தகுதிசான்று பெறுவதற்கான பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ள உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையிலிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு தோராய செலவினம் ரூ.**23,088/–** க்கு மன்ற தீர்மான எண் **2073** நாள் **30.01.2018**ல் பெறப்பட்டது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி வண்டி TN 31 BD 9829 சிறிய ரக வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளராக New Cars India- Authorised Dealer for PIAGGIO Vehicles (Pvt.) Ltd., நிறுவனத்தின் மூலம் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்சமயம் மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்க பணிகள் முடிவடைந்து சிதலமடைந்த ஒரு சில பாகங்கள் அதனுடன் மாற்றப்பட்டு பழுதுநீக்கம் செய்து அதற்கான பட்டியல் தொகை ரூ.**34,545/–** க்கு வரப்பெற்றுள்ளது.<br>எனவே TN 31 BD 9829 சிறிய ரக வாகனத்தின் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள New Cars India – Cuddalore நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி அதற்கான கூடுதலான செலவினத் தொகை ரூ.**34545/–**ஐ மன்றப் பொருள் பின்னேற்பு அனுமதிக்கும், மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மேற்படி வண்டி பழுது பார்த்ததற்கு கூடுதலான செலவினத் தொகைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(11216/ 2017/ எச் 2)** |
| **12)** | கடலூர் பெருநகராட்சியின் **2018–19**ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட வருவாய் நிதி, குடிநீர் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றின் Bank Reconcilation Statement, Income and Expenditure Statement, Balance Sheet, Trial Balance மற்றும் இணைப்புகள் ஆகியவற்றை **6** நகல்கள் ஜெராக்ஸ் எடுத்து, பைண்டிங் **5** எண்ணிக்கை செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.**25,000/–**ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| **13)** | கடலூர் பெருநகராட்சியில் **2019–20**ஆம் ஆண்டில் பணி செய்து முடித்த ஒப்பந்ததாரர்கள் பட்டியல்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியங்களில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி பிடித்தங்கள் உரிய வருமான வரிக் கணக்கில் செலுத்த திரு.எல்.முத்துக்குமரன், பட்டயக் கணக்கர் மூலம் **4** காலாண்டிற்கும் E-Filing செய்த வகையில் ரூ.**50,000/** உத்தேச செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். **(ந.க. 5853/ 2018/ பி1)** |
| **14)** | **2020–21**ஆம் ஆண்டிற்கான சீருடைகள் கடலூர் பெருநகராட்சி பணியாளர்கள் (வெளிப்புறம் மற்றும் உட்புறம் பணிபுரியும்) அலுவலக உதவியாளர்கள் மற்றும் பொறியர் பிரிவு, சுகாதாரப் பிரிவு (தூய்மைப் பணியாளர்கள் உட்பட) வழங்க வேண்டும். (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு செட்டுகள் பாலியெஸ்டர் சீருடைகள் ஓட்டுநர்களுக்கு வழங்கப்பட வேண்டியது, **2019–2020**ஆம் வழங்கப்பட்டு விட்டது). எனவே ஓட்டுநர்கள் தவிர்த்து மற்ற பணியாளர்களுக்கு **2020–2021**ம் ஆண்டிற்கு சீருடைகள் வழங்கவும் மற்றும் அதற்கான தையல் கூலி செட்டு ஒன்றுக்கு ஆண்களுக்கு ரூ.**500/–** பெண்களுக்கு ரூ.**40/–** எனவும், மகப்பேறு |

| | |
|---|---|
| | உதவியாளர்களுக்கு சீருடைப் படியாக ரூ.2000/– அரசு விதி (அரசாணை எண் 306, நிதித்துறை (ஊதியக்குழு)த்துறை நாள் 13.10.2017ன்படி வழங்கவும், அதற்கான தோராய செலவினமாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) செலவிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். ( 6459/ 2020/ எச் 1) |
| 15) | மக்கள் தொகை நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 16.03.2020 தேதிய அரசாணை நிலை எண்.347, மாண்புமிகு முதலமை.ச்ர் அவர்களின் பத்திரிக்கை செய்தி நாள் 16.03.2020 தேதிய உத்தரவு மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 17.03.2020 தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி “கொரோனா வைரஸ்”தொற்று பரவாமல் தடுக்க தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் ஒரு பகுதியாக இந்நகராட்சிக்குட்பட்ட இடங்களில் பொதுமக்கள் கூடுவதை தடுக்க தனியார் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மூடப்பட்டன.<br>பொதுமக்கள் வெளியில் வராத அளவிற்கு பேருந்துகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. பள்ளிகள் மூடப்பட்டது. கோயில் அனைத்தும் சாத்தப்பட்டன. திருமணங்கள் இதர அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது. திரையங்குகள் மூடப்பட்டது. ஆண்டுக் குத்தகை தினசரி கட்டண கழிவறைகள், பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து புறப்படும் நேரம் மற்றும் வர்த்தக விளம்பரம் கட்டணம் வசூலித்தல், பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பெட்டக அறைகள் கட்டணம் வசூலிக்கும் உரிமம், கடற்கரைக்கு வரும் பொதுமக்களின் வாகனங்கள் பாதுகாக்கும் கட்டணம் வசூலித்தல் மற்றும் பூங்கா கட்டணம் வசூலித்தல் போன்ற ஆண்டு குத்தகை இனங்கள் அனைத்தும் அரசு மறு உத்திரவு பிறப்பிக்கும் வரை மூடப்பட்டது.<br>கடலூர் பெருநகராட்சி 2018-19ம் ஆண்டு முதல் 2020-21 இனம் 11 திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிவறை மற்றும் குளியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2020-21ம் ஆண்டு திரு.செல்வம், த/பெ. கலியபெருமாள் என்பவருக்கு உரிமத் தொகை பெற்றுக்கொண்டு உரிமம் உத்திரவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி, உரிமைதாரர் திரு. செல்வம், த/பெ. கலியபெருமாள் என்பவர் தனது 23.03.2020 தேதிய விண்ணப்பத்தில் கொரோனா வைரஸ் பீதியாலும் அரசின் முன் எச்சரிக்கையாலும், மக்கள் நடமாட்டம் அறவே இல்லாததாலும் 22.03.2020 மற்றும் ஊரடங்கு தொடர்ந்து 23.03.2020ல் அரசின் 144 ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி, கட்டணக் கழிவறை மற்றும் குளியலறையை மூடிவிட்டேன் என தெரிவித்துள்ளார்.<br>மேற்கண்ட கட்டணக் கழிவறை 06.09.2020 வரை மூடப்பட்டு இருந்தது. திரு. செல்வம், த/பெ. கலியபெருமாள் என்பவரின் 30.09.2020 தேதிய கடிதத்தில் அரசு இன்று ஊரடங்கு தளர்வு செய்வதாக சொல்லி அரசு பேருந்துகள் இயக்க உத்திரவிடப்பட்டது. இந்நிலையில் பேருந்துகள் பேருந்து நிலையத்தில் வந்து நின்று கொண்டிருக்கிறது. பயணிகள் யாரும் வராததால் பேருந்து இயங்கவில்லை. எனவே , பேருந்து நிலையம் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது. கழிவறையை திறந்தும் எந்த பயனும் இல்லை என்பதால் நான் செலுத்திய தொகையை வட்டியுடன் திரும்பத் தருமாறு கோரியுள்ளார். இந்நிலையில் கட்டணக் கழிவறையை தினசரி பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று தாங்கள் என்னை நிர்ப்பந்தித்தால் நாள் ஒன்று ரூ.2000 வீதம் வசூல் செய்ய நேரிடும் என தெரிவித்துள்ளார்.<br><br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 07.09.2020 அன்று பேருந்துகள் அனைத்தும் மாவட்டம் விட்டு மாவட்டம் போக தளர்வு அளித்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, திருப்பாதிரிப்புலியூர் கட்டணக் கழிவறையை திறந்து திரு.செல்வம் த/பெ. கலியபெருமாள் என்பவருக்கு 04.09.2020 தேதி உத்திரவிடப்பட்டது. இவ்வுத்தரவினை தொடர்ந்து, திரு.செல்வம் த/பெ. கலியபெருமாள் என்பவர் திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்தில் 07.09.2020 முதல் 13.09.2020 வசூலித்துவிட்டு அரசு பேருந்துகள் மட்டுமே வருகிறது என்றும், மூன்று |

எண்ணிக்கையிலான தனியார் பேருந்துகள் வருகிறது என்றும் தன்னால் தொடர்ந்து இக்குத்தகை தொடர்ந்து நடத்த இயலாது என்பதால் அவ்வாறு நடத்தினாலும் எனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்று தொடர்ந்து பேருந்து கட்டண கழிவறையை ஒப்படைப்பதாக 11.09.2020 தேதியில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் தொடர்பாக வருவாய் ஆய்வாளர் (கூ.பொ) மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிவறை, கட்டணம் வசூலிக்கும் உரிமதாரர் 11.09.2020 தேதிய விண்ணப்பத்தின்படி பேருந்துகள் குறைந்தது மூன்று பேருந்துகளும், அரசு பேருந்துகள் குறைவாக வருவதாகவும், பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படாததாலும் பொதுமக்கள் வருகை மிகவும் குறைவாகவே உள்ளது. ஒரு நாளைக்கு ரூ.1500 முதல் 2000 வசூல் ஆகாது என்பது உண்மை என தெரியவருகிறது எனவும், உரிமதாரர் கோருவது போல் குத்தகையிலிருந்து விடுவிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்கள்.

தற்பொழுது குத்தகைதாரர்கள் தன்னை கட்டணக் கழிவறை வசூலிப்பதிலிருந்து விடுவிக்க தனது 29.06.2020, 03.09.2020 மற்றும் 11.09.2020 ஆகிய தேதிகள் விண்ணப்பித்தும் தொடர்ந்து நகராட்சிக்கு அழுத்தங்கள் கொடுத்தும் , தன்னால் இக்கட்டணக் கழிவறையை நடத்த இயலாது என வலியுறுத்தப்பட்டதாகவும், கட்டணக் கழிவறை இயங்கவில்லை எனில் பொதுமக்களின் பாதிக்கப்படும் என்பதாலும், மறு ஏலம் விடும் வரை துறைமூலம் வசூலிக்கலாம், அதற்கான ரசீது புத்தகம் மற்றும் விளம்பர கட்டணத்திற்கு ஆகும் செலவினம் ரூ.1,00,000/- செலவு செய்துகொள்ளவும், ஏலம் விடவும், ஏலம் இறுதி செய்யும் வரை துறை மூலம் வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர்அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் ஏற்கலாம்.

3) அனுமதிக்கலாம். ( ந.க. எண்.10933 /2017 /அ2 )

16) மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் நடவடிக்கைகள், ந.க. எண் அ2/ 1821/2020 நாள் 16.09.2020ன்படி, கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி (2020–21) ன்கீழ் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக கீழ்க்கண்ட பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பெரியார் கலைக்கல்லூரியில் குடிநீர் வசதி, மின்சார வசதியுடன் கூடிய 14 எண்ணிக்கை குளியலறை, 6 எண்ணிக்கை கழிவறை மற்றும் மருத்துவர்களுக்கான குளியலறையுடன் கூடிய கழிவறை அமைத்தல் பணி | 9.25 |

மேற்படி பணி மேற்கொள்ளவும், கோவிட் 19 தடுப்பு நடவடிக்கை பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 17) | கடலூர் பெருநகராட்சி 2012–2013–ம் ஆண்டு முதல் 2014–2015 ஆகிய 3 ஆண்டின் குத்தகை இனம் எண்.6 கடலூர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பெற்ற திரு.அமிர்தராஜ் த/பெ. ஆறுமுகம் என்பவர் குத்தகை உரிமம் பெற்றுள்ளார். குத்தகை இணத்திற்கு சேவை வரியாக ரூ.1,08,835/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்ணூற்று முப்பத்து ஐந்து மட்டும்) செலுத்த இவ்வலுவலக இதே எண்ணிட்ட 27.08.2013. 08.10.2013 ஆகிய தேதிகளில் அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வறிப்பை பெற்றுக்கொண்டு மேற்கண்ட தொகையை குத்தகைதாரர் செலுத்தியுள்ளார். (சலான் எண்.1307629 நாள் 10.10.2013 இத்தொகையை செலுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை எண்.25929/2013 எண்ணில் வழக்கை தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி, வழக்கில் அன்னார் செலுத்திய ரூ.1,08,835/– திரும்ப வழக்கு 18.10.2019 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பில் மேற்படி, தொகை ரூ.1,08,835/– அன்னாருக்கு திரும்ப வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின்படி தொடர் நடவடிக்கை எடுக்க இந்நகராட்சி சார்பில் ஆஜரான சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.B. ஆனந்த் அவர்களிடம் சட்ட ஆலோசனை 12.06.2020 தேதிய கடிதத்தின்படி கோரப்பட்டது. வழக்கறிஞர் தனது 12.06.2020 தேதிய சட்ட ஆலோசனையில் குத்தகைதாரர் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய நிலுவை ஏதுமிருப்பின் ஈடு செய்து மீதம் உள்ள தொகையை வழங்க தெரிவித்துள்ளார். அன்னார் இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை ஏதுமில்லை. மேற்கண்டவாறு அன்னார் செலுத்திய நிலுவை தொகை ரூ.1,08,000/– வழங்கலாம்.<br>மேலும், இவ்வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜரான சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் வழக்கு கட்டணம் மற்றும் வழக்குகளுக்கான தொகை ரூ.15,000/- மற்றும் சட்ட ஆலோசனை வழங்கியதற்கு ரூ.5,000/- ஆக ரூ.20,000/- கோரியுள்ளார். இத்தொகையில் தற்பொழுது ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர்அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண்.10937 /2017 /அ2 ) |
| 18) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை பயன்பாட்டிற்கு உள்ள ஜெட்ராடிங் வாகனம் TN 31 AH 1885 பதிவெண் கொண்ட லாரிக்கு ஆயுள் காப்பீடு 30.10.2020 உடன் முடிவடைவதால், 31.10.2020 முதல் 30.10.2021 முடிய உள்ள காலத்திற்கு ஆயுள் காப்பீட்டை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.40,675/– ஐ நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (1382/ 2020/இ2 ) |
| 19) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN 31 AB 7285 பதிவெண் கொண்ட ஈப்பிற்கு ஆயுள் காப்பீடு 08.10.2020 உடன் முடிவடைவதால், 09.10.2020 முதல் 08.10.2021 முடிய உள்ள காலத்திற்கு ஆயுள் காப்பீட்டை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.11,790/– ஐ நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (1382/ 2020/இ2 ) |

| | |
|---|---|
| **20)** | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட **45** வார்டு பகுதிகளில் **8570** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் உள்ளன. இந்த தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்ததாரர் மூலம் குறைந்தபட்ச பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மின்உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.**8.60** இலட்சத்திற்கு PWD (2020-21)ல் தரப்படுத்தப்பட்ட விலை விகித பட்டியலின்படி மற்றும் உள்ளூர் விலைப்புள்ளியின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். **(213/ 2020/ இ2)** |
| **21)** | கடலூர் பெருநகராட்சி வார்டு எண்.**1** முதல் **45** வரை திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையங்களில் உள்ள **20**க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறு நீர்மூழ்கி மோட்டார்கள், கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் நகரமெங்கும் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகளுக்கான ஆழ்துளை நீர்மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணி ரூ.**9.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **26.08.2020**–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகிதத்திற்கு</th></tr><tr><td>1.</td><td>திரு.T. சேஷாத்திரி ,கடலூர்</td><td>0.07% (ரூ. 8,77,283.63) மதிப்பீட்டை விட குறைவு.</td></tr><tr><td>2.</td><td>திரு .K. மாரிமுத்து, கடலூர்</td><td>0.11% (ரூ. 8,78,818.08) மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr></table><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் **1**ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி **0.07**% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 8,77,283.63) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. சேஷாத்திரி ,கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| **22)** | கடலூர் பெருநகராட்சி வார்டு எண். **1** முதல் **45** வார்டு வரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய், பிரதான குழாய், வால்வுகள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள், வால்வுகளில் பழுது நீக்கும் பணி ரூ.**9.50** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **26.08.2020**–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.06% (ரூ. 9,37,713.90) மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .K. மாரிமுத்து, கடலூர் | 0.13% (ரூ. 9,39,528.30) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.06 % (ரூ. 9,37,713.90) மதிப்பீட்டை விட குறைவு அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. சேஷாத்திரி ,கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**23)** கடலூர் பெருநகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 02.09.2020ம் தேதிய அரசாணை நிலை எண் 298ல் "கொரோனா 2019 " ஐ முன்னிட்டு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால், ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடை வாடகைகள் 01.04.2020 முதல் 31.05.2020 வரை வசூலிக்க விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. பதிவு செய்யலாம். (7325/ 2020/ இ2)

**24)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட ராஜாம்பாள் நகர் பகுதி கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள கிணறுகளில் மண் தூர்ந்துள்ளமையாலும், குப்பைகள் உள்ளதாலும் சரிவர கழிவு நீரை வெளியேற்ற முடியவில்லை. இதன் காரணமாக மோட்டார்களையும் பழுது நீக்கம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட ராஜாம்பாள் நகர் பகுதி கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள கிணறுகளில் மண்களை தூர் வாரும் பணிக்கு ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.
1, மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**25)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட ராஜாம்பாள் நகர் பகுதி கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள கிணறுகளில் மண்களை தூர் வாரும் பணிக்கு ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 25.08.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.12%(ரூ. 2,16,265.21) மதிப்பீட்டை விட குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திரு.K. மாரிமுத்து ,கடலூர் | 0.14% (ரூ. 2,16,816.81) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி 0.12% (ரூ. 2,16,265.21) மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதியும், மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

